உ

தெய்வதுணை.

தேசாதிபதியென்னும்

செட்டிபலிஜவாரின்

குலதெய்வமாலை.

இது

[illegible]

[illegible]

தெலுங்கு செட்டியார்கள்

வேண்டுகோளின்படி

[illegible]

[illegible] வெ. சேஷாசல நாயகர் அவர்களால்

இயற்றப்பட்டு

[illegible]

அச்சிடப்பட்டது.

[illegible]

[illegible]

601
3-12

Y512 P
N12
148981

உ

தேவிசகாயம்.

தேசாதிபதியென்னும்

செட்டிபலிஜவாரின்

குலதெய்வமாலை

இஃது

காங்கயத்திற்கடுத்த

சுப்ரமண்யகவுண்டன்வலசு காவலிபாளையம்

தெலுங்க செட்டியார்கள்

வேண்டுகோளின்படி

காங்கயம் அஷ்டாவதானம்

சிட்டா வே. சேஷாசல் நாயடு அவர்களால்

இயற்றப்பட்டு

சேலம் சுதேசாபிமானி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1912.

பரிதாபி ௵ ஆடி ௴.

M 8981

உ

வேலுமயிலுந்துணை.

காப்பு.

கங்கைபுனை நஞ்சக் கரியுடையான் மாபன்ன
கங்கைபுனை நஞ்சக் கரியுடையான் – தங்குந்தேர்
அச்சிறுத்த மாலைமனத் தாய்த்துருவ தெய்வத்தின்
இச்சிறுத்த மாலைபுகல் வேன்.

பேட்டை பலிஜவாரு.

சந்திரவமிச க்ஷத்திரிய பலிஜவாரில், வேறொரு வகுப்பார்களாகிய பேட்டை பலிஜவாருடைய விருத்தாந்தங்களைப் பற்றி விவரிப்பாம். பேட்டை என்றால் கோட்டைக்குவெளியிலிருக்கும நாடு நகர கிராமங்களாம், ஆகவே பேட்டை பலிஜவாரு என்றால் விஜயநகரக கோட்டைக்கு வெளியிலிருக்கும் நாடு நகர கிராமங்களிற் குடி இருந்த பலிஜவாருகளாம். இவர்கள் இப்போது பற்பலவித கோத்திரத்தைச் சார்ந்தும் அநேக வீட்டுப் பெயர் சூத்திரங்களால் பிரகாசிக்கிறார்கள். இவர்கள் ஆதியில் விஜயநகர ஸம்ஸ்தானத்தாருடைய பந்து மித்திரர்களாக விருந்தும் பிறகு காலதேச வர்த்தமானங்களினால், வேறு வேறு விடங்களுக்கு வலசையாகப் போய் வர்த்தகம், விவசாய முதலானவைகளைச் செய்துக்கொண்டும், ஆங்காங்குத் தங்கி வேறு வேறு ஜாதி, மதஸ்தர்களைப் போலிருக்கின்றனர். இந்தப் பேட்டை பலிஜவாருகளுக்குள் 18-வகுப்பார்கள் இருந்தார்கள். இப்போது இவர்களுக்குள் இரத்தினாலவாரு (கல்காரர்), முத்தியாலவாரு, பகடாலவாரு, காஜுலுவாரு, சித்திராலவாரு, ஒப்பனவாரு, வெலமவாரு, கம்மவாரு, பெரிகவாரு, கொல்லவாரு, முசுகுவாரு, லிங்கவாரு, பூந்தமல்லிவாரு, கோயிலடிவாரு, கண்டிவாரு, பத்திவாரு, ஜனபவாரு, வாடவாரு, கன்னடி பலிஜவாரு, எத்துகன்னடிவாரு, எனுமுகன்னடிபலிஜவாரு, செட்டிபலிஜவாரு, உப்புபலிஜவாரு என்றுதி பல வகுப்பினர்களாகப் பிரகாசிக்கிறார்கள்.

இவர்கள் யாவரும் ஒரு காலத்தில் ஒரே குடும்பத்தாராக இருந்திருக்கலாம். இடையில் காலதேச வர்த்தமானங்களைத் தழுவி பற்பலவிடங்களிற்போய் பற்பலவித வர்த்தகம், விவசாயம், கைத்தொழில்களைச்செய்து வந்ததினால் பூர்வ உற்பத்தி, ஜாதி,

மதாசாரங்களை காலதேச வித்தியாசங்களினாலும், பழக்க வித்தியாசத்தினாலும் மறந்து இப்போது பற்பல வித ஜாதியாராகப் பெயர்களைப்பெற்றார்கள் போலும். ஆகவே இவர்களிற் செட்டி பலிஜவாரு வகுப்பார்களுடைய விருத்தாந்தங்களைப்பற்றி மாத்திரம் இதனடியிற் சங்கிரகமாகக் காட்டுகிறோம்.

செட்டி பலிஜவாரு.

இவர்களைத் தெலுங்குச்செட்டிகள் என்று சொல்வது மு[illegible]வர்கள் இருபத்துநான்குமனையார் என்றும் சொல்லிக் கொள்ளுகிறார்கள். இவர்கள் ஆதி சரித்திரம் பின்வருமாறு:— "பிருதிவீசன்" என்னும் மன்னவன், அந்தகாசுரனால் அவஸ்தைப்பட்டுச் சிவனிடம் முறையிட அச்சிவனுத்திரவினால் பிரம்மா வந்து அந்த அந்தகாசுரனைக் கொன்று அவன் மண்டை ஓடுகளைத் தராசு தட்டங்களாகவும், முதுகெலும்பைத் தண்டமாகவும், நரம்புகளைக் கயிறுகளாகவும் கொடுத்து திராசாக்கி வியாபாரஞ் செய்து பிழைக்கும்படி சொல்ல அவனும் அப்படியே செய்து புத்திரனில்லாக் குறையால் புத்திரகாமேஷ்டியாகம் செய்ய அவன் மனைவி சுஜனையின் வயிற்றில் 24-ரிஷிகளே 24-புத்திரர்களாகப் பிறந்ததாகவும், அந்த இருபத்துநான்கு பெயரே வங்குருவன், கத்தவங்குரவன், வாஜவன், மராட்டியன், கயரவன், தில்லவான், ரெட்டயன், பிடுகுவான், கவலைவான், தவழைவான், கோலவான், கனத்தவான், பல்லவன், மும்முடிவான், கோட்டைவான், அம்மைவான், மங்களவான், பக்ஷவவான், லகாக்யன், நனவிதியான், முதலவான், பலவிதியான், இராயலுவான் என்ற 24-தெலுங்கு வமிசத்தார்களானதாகவும், இவர்களில் மும்முடியானுக்குக் காஞ்சிபுரத்தில் முடிசூட்டியும் மங்களவானுக்கு குசலவதி நகரத்தில் முடிசூட்டியும் மற்ற 22-பெயர் மந்திரிகளாகக்கொ

ண்டு ஆண்டுவருகையில் சோழனுடைய உத்திரவின்படி கப்பல் தயார் செய்து தென்கடல் வழியாக மலையாளத்துக்குப்போய் வியாபாரம் செய்ய அச்சேரன் இவர்களைச் சுங்கம் கேட்க இரு கக்ஷிக்காரர்களுக்கும் சண்டையுண்டாக அச்சண்டையில் சேரன் மடிய அவன் குமாரத்தி சிரோன்மணி கருமம்செய்து கேரளத்தை யாண்டதாகவும், பிறகு பாண்டியனுடைய துஷ்ட குடிகளுக்கு இவர்கள் அடைக்கலம் கொடுத்து ஆதரிக்க, அப்பாண்டியனுக்கு தம் சிரங்களைக் கொடுக்க காமாக்ஷியின் மகிமையால் சிரங்களைப் பெற்றதாகவும், பிறகு சோழன் இவர்கள் குடும்பத்தில் ஒரு பெண்ணைக் கேட்க, பொன் பிரதிமையைச் செய்து காமாக்ஷியின் மகிமையால் உயிர் கொடுத்ததாகவும், பிறகு கூர்ச்சரநாட்டு குருகோவிந்தனோடு எதிர்த்துச் சண்டையிட்டு அவனைக் கொன்று அவனுடைய பெண்களை நாயகிகளாகக் கொண்டதாகவும், தம் சொந்தநாயகிமார் அக்கினிகுண்டத்தில் விழுந்து இறந்ததைக் காமாக்ஷியம்மன் மகிமையால உயிர்பெற்றதால் அந்தக் காமாக்ஷி அம்மையே குலதெய்வமாகக் கொண்டாடி வருகிறதாகவும் சொல்லுகிறார்கள். இதுவிஷயத்தில் வேறொரு கதையும் உலாவுகிறது.

அதாவது இவர்கள் கூர்ச்சரநாட்டரசனோடு சண்டைக்குப் போனபோது இவர்களுக்கு எதிரியினால் அபாயமுண்டாகும் குறிப்பை நாய்கள்வந்து அறிவிக்கும் என்றும், அப்போது தம் அரிவையர் அக்கினிகுண்டத்தில் விழவேண்டுமென்றும் சொல்லிப்போக, அந்த நாய்களை எறும்புப் புற்றுக்கருகில் கட்டிவைக்க, அவைகளை எறும்புகள் கடித்தபோது நாய்கள் சகிக்கமுடியாமல் செந்நீரோடு ஓடிவந்து குரைக்க, இவர்கள் பெண்டுகள் பார்த்து பயந்து அக்கினி பிரவேசமானதாகவும் அதன் மேல் இந்த செட்டிபலிஜர்கள் தமக்கு மனைவிகளில்லாக் குறைவினால், கொங்குநாட்டு வேளாளப் பெண்களை வைப்பாட்டிகளாகக் கொண்டதாகவும், ஆகவே இப்போதும் இவர்களுடைய மனைவிகளுக்கு இவர்கள் தாலியைக்கட்டாமல், பந்துக்களான பெண்டு

களைக் கொண்டு தாலியைக் கட்டுவித்தும், கைகளுக்கு வளையல்கள் போடாமலும், சுவாமி முதலான சடங்குகளைச் செய்யும்போது ஸ்திரீகளில்லாமலும் புருஷர்கள் மாத்திரம் செய்து வருகிறார்களாம். இவர்களை 1901-வது கானிஷ்வாரி கணக்கின்படி 95,924 குடிகளென்றும், வடுகர் என்றும் எழுதியிருக்கிறார்கள் போலும். இவ்வகுப்பார்களில் அநேகர் வர்த்தக வியாபாரங்களைச் செய்து தனவந்தர்களாக இருக்கிறார்கள். கோயமுத்தூர் முதலான இடங்களிலிருக்கும் இவர்களிற் சிலர்பேசும் பாஷை தமிழ் தெலுங்கு கலந்து கொச்சையாகப்பேசி வருகிறார்கள். இன்னும் இவர்களைப்பற்றி பாலபாகவதம், வசுசரித்திரம், நரச பூபாலியம், நரபதி விஜயம், ராமராஜீயம் முதலிய கிரந்தங்களில் விவரித்தெழுதப்பட்டிருக்கிறது.

☞ இச்சரித்திரம் கோயமுத்தூர் கலாநிதி பத்திராதிபர் ஸ்ரீமான் சேலம் பகடால நரசிம்மலு நாயடுகாரவர்கள் இயற்றிய காயடுகாரு சமஸ்தானம் என்னும் பலிஜ புராணத்திலிருந்து எடுத்து எழுதப்பட்டது.

கரங்கயம்,

அஷ்டாவதானம் சிட்டா,

☞ வே. சேஷாசல நாயடு.

உ

வேலுமயிலுந்துணை.

அங்காளம்மன் பதிகம்.

[illegible] மற்றுப்பற்று என்ற பண்.

சீருலாவியவெஞ்சடாதரர்த்தமேவியமாதர்பால்
பாருலாவிடப்புரிந்திடு பாதபங்கயவல்லியே
காருலாவியதுகிலால்வரைகளிந்தமின்கரைநாட்டினில்
சீருலாவியகாவலிப்பதிசேரங்காளம்மைத்தேவியே. (1)

மன்னுசாலைகள்சோலைகள்புடைவாய்ந்தபல்வளமேவியே
பன்னுவானவர்நாடெனப்புவிபகருந்தென்கரைநாட்டினில்
பொன்னமுத்துமணிகலந்தபொருநைசூழ்ந்திடுகாவலி
நன்னகர்தனில்மேவிவாழ்ந்திடுமங்காளம்மைத்தேவியே. (2)

ஆதியேபரஞ்சோதியேயென்றம்பிகாவெனநம்பியே
நீதிசேருமகாதவஞ்செறிசித்தர்போற்றிடுஞ்சத்தியே
வாதியாகியநம்மனத்தின்வழிச்செலாதுவந்தாண்டருள்
நீதிலாதொளிர்காவலிப்பதிசேரங்காளம்மைத்தேவியே. (3)

மந்திமேவிவளர்ந்திடுங்கருமங்கள்தேன்சொரிதென்கரைப்
பந்தமேவுகுறிச்சியம்பதிபற்றுகாவலிமாநகர்
வந்துவாழ்ந்திடுசுந்தராநந்தமாதவிகருணாகரி [யே.
சிந்தைநோய்தவிர்த்தாண்டருட்பிணைச்செய்யங்காளம்மைத்தேவி

பாரின்மாமழைகாத்திடற்கேனுமோர்பாடசாலையிலண்டியாச்
சேரார்நின்பதம்சேவைசெய்துசுகம்பெறுந்தரங்கொள்வீரா
வாருலாமுலைமாதராரிசைவாய்ந்ததென்கரைநாட்டினில
பேருலாவியகாவலிப்பதிபேணங்காளம்மைத்தேவியே.

திரணமாகிலும்கல்வழி தனிற்சென்றிடாதுபுகைத்துமேல்
மரணம்வந்திடில்லைத்திழுந்திடுவன்களைளரெவ்வாறுய்வார்
சரணமென்றுனைநம்பினோர்க்கருள் தங்கமேவியதென்கரை
[illegible]ரணத்தாகியதாவலிப்பதியருளங்காளம்மைத்தேவியே. (6)

தண்டமிழ்க்கவிபாடியேனின் சரணமீதுபுனைந்திட
மண்டலத்தினிற்பாடிடுந்துறைவகைசற்றேனுமுணர்ந்திலேன்
பண்டொருமனுரைத்தமாதிரிபாடுகாயினையாண்டருள்
கண்டதென்கரைக்காவலிப்பதிகநியங்காளம்மைத்தேவியே. (7)

தண்டைசெஞ்சிலம்பம்பொன்பாடகத்தாண்மலர்மிசைமாமலர்
கொண்டுபோற்றிடும்அன்பர்களிடர்கொண்டகாலையழித்திட
சண்டனஞ்சியசிங்கவாகனந்தன்னிலேறிவந்தாண்டருள்
மண்டுதென்கரைக்காவலிப்பதிவாழுங்காளம்மைத்தேவியே. (8)

ஐந்துகூறினிலாம்புலா இடலானமாமலக்கூட்டினில்
வந்துவாழ்ந்திடுகின்றசீவர்கள்வர்க்கமேவியிப்பூவினில்
இந்தநாள்வரையும்பிறந்தவைஎத்தனையெனச்சொல்லுவேன்
விந்தைதென்கரைக்காவலிப்பதிமேவுங்காளம்மைத்தேவியே. (9)

சுருதிபோற்றுமதிக்குலத்திற்றுலங்கிவாதுவிளங்கிய
பிருதிவீசன்றவத்தினான்முன்புபெற்றமூவெண்மர்தம்முளே
கருதியேயுனைப்போற்றிசெய்திடுகேத்தவங்குருவற்கருள்
தருதியேபரமேஸ்வரிபுவிதன்னில்யாவரும்வாழியே. (10)

அங்காளம்மன் கும்மி.

சீர்மேவுந்தென்கரைநாட்டிற்சிறந்துச்
[illegible]ற காவலிமாநகரித்
[illegible]ங்காளம்மன்கும்மி பாடத்

சத்திசிவன்மலை வேலவர்பாதமும்
  தாயானவாலசரஸ்வதியின்
சித்திமிகுத்திடும் பாதமும்போற்றிச்
  செந்தமிழ்க்கும்மி புகல்வோமே. (2)

நாடும்அழகிசேர் தாயவகிலாண்ட
  நாயகிலக்கம நாய்க்கனகர்
ஆதிமூலமெனு மாவரதராஜர்
  அம்புயபாதந்துணையாமே. (3)

சத்தியமேவியவூஞ்சல்வல்சிற்
  றழைத்தபொன்னுச்சியும் வெண்ணெய்மலை
சித்தியுடன்வளர் தெண்டாயுதங்கொண்ட
  செந்தமிழ்நாதரும் காப்பாமே. (4)

சிலமுயரெழுகூறம்மன்றனையும்
  சின்னம்மன்கோவிலெழுந்தருளும்
வாலைசிவகாமி சின்னம்மன்றனையும்
  வாணரையுந்துதி செய்வோமே. (5)

எங்கும்புகழ்கொங்கு மண்டிலந்தன்னி
  லிருபத்துநான்கி லிரண்டான
தென்கரைநாட்டின் பெருமையுரைத்திட
  சேடனாலாகா தமாதரசே. (6)

உத்தண்டவேலவர் ஓங்கிவளரும்பொன்
  னூதிவரையுடன் ஆண்பொருனை
முத்தங்கொழித்து வருதலிற்பல்வள
  மொய்த்திடுந்தென்கரை நன்னாடு. (7)

அப்பிரமேசர் அருள்பெருகுமெங்கள்
  அன்புளவேணாட ராசேந்த்ரன்
கப்பங்கொண்டே யரசா[illegible]ரிந்து
  கதித்திடுந்தென்[illegible]டு.

(14593)

இந்தநன்னாட்டினிற் காவலிமாநகர்
    என்றசிறப்புப் பெயர்புனைந்து
சந்தமிகுந்தபதியில்வளர்கிற
    தாயான அங்காளம்மாதேவி. (9)

ஆதியிற்சந்திர வம்மிசந்தன்னி
    லவதரித்திட்ட விஜயாகர்
நீதிமிகுந்திடும் ராயர்மரபில்
    நிலைத்தபெருநிலி ராசேந்திரன். (10)

திக்கெங்குங்கட்டி யரசாண்டுவரச்
    சிலமில்லாவந்த காசுரனும்
[illegible]அவஸ்தை புரிந்திடமன்னவன்
    மேவிச்சகித்திட மாட்டாமல். (11)

கங்கையைச்செஞ்சடை மீதிலணிந்த
    கடவுளடிபணிந்தே தன்ற
சங்கதிசொல்லி முறையிடவேயவர்
    தாமரைமீதில் வளர்வோனை. (12)

சென்றந்தக்காசுரன் தன்னுடையசிரஞ்
    சேதித்திவன்றனைக் காத்திடென
அந்தவிதம்வந்தவன் றலைவெட்டி
    யவன்மன்னடையோடு முதுகெலும்பை. (13)

ஆனைகரம்புகள் கொண்டுதராசெபு
    ஆக்கிக்கொடுத்துப் பிழைத்திடென
வானவர்போற்றும் பிரமனுரைத்தவன்
    வாழும்பதியை யடைந்திடவே. (14)

இப்படிவாழ்ந்திடும் நாளிற்பெருநிலி
    [illegible]

சென்னை-600 005.

காறும்பிருதிவி மன்னவன்புத்திர
காமேஷ்டியாகத்தைச் செய்திடவே
ஆனைநாளாறு மாமுனிவோர்கள்வந்
தன்னவள் கர்ப்பந்தனிலுதித்தார். (16)

வந்தவிருபத்து நால்வரிலேகர்த்த
வங்குருவன் குலத்தார்களுக்கு
சொந்தமதாகிய அங்காளம்மன்குல
சுந்தரதேவதையானவளாம். (17)

அண்டிவந்தேதனைப் பூசைபுரிந்திடும்
அன்பர்கள்வேண்டும் வரங்களெல்லா
மண்டலந்தன்னிலுதவித் தனது
மகிமைசெலுத்திடு மாதரசி. (18)

புத்திரசந்தான மில்லாதவர்க்குப்
புகழ்ச்சிபெருக மகவருளி
நித்தியங்காத்திடலாலுடன்பெயர்
நேர்ந்தவரும்பிள்ளைத் தேவதையாம். (19)

பற்றுமிகுந்திடு நாலெட்டுவாத்தியம்
பம்பையுடனே முழங்கிடவே
வெற்றிமிகுந்த கொலுவினில்நாளும்
விளங்கிவளர்ந்திடுந் தேவியராம். (20)

வாசமிகுந்த திருவாலங்காட்டினில்
வல்லவுமாபதி யாருடனே
நேசமிகுந்து நடம்புரிந்த இவள்
நேர்மையுரைத்திடல் மிக்கரிதே. (21)

வந்தபிணந்தின்னும் பூதப்பசாசுகள்
வல்லபடையெனக் கொண்டவளாம்
சிந்தைதனிற்றயவுடனே வென்றவன்

நாரணிமாதவி சூலித்ரியம்பகி
ஞானமிகும் பரிபூரணியாம்
காரணியப் பரை சுந்தரமும்பாத
சூரத்திறமும் அங்காளம்மாதேவி. (23)

மாதமும்மாரி பொழிந்திடவுமிந்த
மாநிலமெங்குந் தழைத்திடவும்
தீதகற்றுஞ்சுந்தர வுருவங்குலவு
தேவதை யங்காளம்மன்வாழி. (24)

சுப்பிரமண்யகவுண்டன்வலசு

காமாட்சியம்மன் காவடிச்சிந்து.

பூமலியுங் காங்கயனன் னாட்டில் - மிகு
மேன்மைசேர் மாங்குயில்பண் கூட்டி - யிசை
தாமுரல வேங்குரல் நீட்டி - வளரும்
பொலிதிரியம் பகநதியும் பொருந்தப்புரஞ் சிறமுதவிப்
பொங்குகுணப் பங்கிலலங் கார - மொடு
தங்குமயில் ரங்கமதி னோரம். (1)

புண்ணியம்சேர் வெள்ளகல்வி லாச - சுப்ர
மண்யநகர் தன்னிலதி நேச - மிகு
கண்மணியே யன்பர்கள்வி லாச - மொடு
கல்பலவா மவைகளோங்க மிகவருள்செய் மகிமைமகள் நிறை
பூரணகா மாட்சியெனுந் தாயே - நல்ல
சீருதவ முன்புவரு வாயே. (2)

அளிதமிழ் முது மெனிறுவபல கருக்கிடமை மெமதுரிமைப்பி
லாக்கியகா மாட்சியெனுந் தாயே - கல்வ
பாக்கியமுண் டாக்கியருள் வாயே. (3)

மதிமரபின் மாஸ்பிருதி வீசன் - எனத்
துதிபரவி வாழுமக ராசன் - தனைச்
சதிபுரிய வெண்ணிவரு மோசன் - தலை
படமடென வருகுருதி யிடைபுரள வாழுதலி
வல்லமரில் வெலலவரந் தந்தே - எதிர்
நில்லரசி சொல்லருளு வந்தே. (4)

கூர்ச்சரமே சத்திணிமேல சென்று - பவர்
ஆச்சரிய மேவஎதிர் நின்று - வந்து
வாச்சதிறு கல்வசம ரென்று - பகை
சொலெருகோ விந்தனுடல் பொடிபடவே வீந்துசெயுங்
கொண்டிடுகோ வாறுமனே பூடே - நிலே
யின்றவனே யாருமினே யிடே. (5)

வேறு.

வேறுதுணையறி யேனே - மினிமானே - தொழுதேனே - உயர்
விண்ணவருந்துதி மானே - புகல்
வித்தைக்குரு வானவளே
அத்தர்க்கரு கானவளே
வேதவித் தானவர் முன்னே - யருட்
சோதி யுரைத்திடு பின்னே. (6)

மன்னுமரக்கலங் கொண்டு - குடகண்டு - கடல்கண்டு - பல
வாணிபஞ்செய்திடப் பண்டு - சேரன்
வரியேதரு கெனநாமது
புரியோமெனு மறுநால்வர்கள்
மாதா வெனும்பர [illegible] , நினே

வண்ணமிகுங் - கலை வாணி - பரிராணி - பயிராணி - இனம்
வந்துனை தடி காணி - யென
மலர் தூவிட வேயருள்புரி
கிறகாரணி யேதமிழ்சொல
வாக்கு வரந்தரு வாயே - ஒரு
போக்கறி யேன்சிறு சேயே. (8)

வேறு.

கண்ணியமி குந்தசுப்பிர மண்யாகர் தன்னில்வரு
காரணி காமாட்சியேஅ மங்கையே - மத
வாரண மழைத்தவரி தங்கையே - ஒரு
காசுமேனில் பேசிடாதழி
நீசர்வாழ்வுறு வாசல்மேவிடு
கட்டமகற் றிக்கிருபை பாலியே - மிகு
ஒட்டர்புகழ் கின்றதிரி சூலியே. (9)

மாவிடப்பி றவிதனி லேயுதித்த மேவரிது
மண்ணிலென வேபுகலும் வேதமே - இதன்
உண்மையறி யாவிடில்வி ரோதமே - அந்த
வாறதித்துனை யேதுதித்துற
வர்தையற்றிடு மேதகற்றிய
மட்டிகட்கு னதுபத சாரமே - வந்து
கிட்டுமோகிட் டாதுவெகு தூரமே. (10)

புண்ணியஞ்செய் யாதுசிறி தன்னைமிக நாடிமண்ணிற்
போகவேபு தைத்தலென்ன பாபமோ - மறை
வாகவேமுன் னோர்களிட்ட சாபமோ - ஒரு
புண்ணியத்தனை யேயுமுன்னருள்

மன்னியகா லாறுமனை தன்னிலே யுதித்தவர்கள்
வங்கிஸுர்கா மாட்சியம்மை வாழியே - உயர்
புங்கமன்ற யோர்கள்மகம் வாழியே - வரு
மாமழைக்குல மிகமகிழ்ந்தறு
பூமிமுற்றிலு மன்ழபொழிந்திட
மண்ணினிலுற் றோர்பலரும் வாழியே - தமிழ்
கண்ணியகாங் கேயனுரை வாழியே. (12)

கீர்த்தனம்.

பல்லவி.

ஆயே யிந்த ஈரயேன் என்னை யாளலாகாதா.

அனுபல்லவி.

மாயோன் மகிழும்சப்ர மண்பாகரில்லில
மன்னிவளர் தங்காய் நீ
என் னுடையபங்காய் - வந்து
வாக்குதவியாக்கி - நீதி - தேக்கியருளி. (ஆயே.)

சரணங்கள்.

கஞ்சமலர்வதனி காமாட்சியம்மையே
காரணி-கபாலி அதி.
வீரமிகுசூலி - பிரகாசன்
ப்ருதி - வீசன் - சதர் - சேச - மிருந்த (ஆயே.)

அந்தகாசுரன் றலை சிந்திடச்செய்து பின்
அடைடுரு கோவிந்தன் ஓடு
படைமுழுதுங்கொன்று - வெற்றி
யாக்கி - நிலைதேக்கி- வரும் பாக்கியந்தந்த (ஆயே.)

வாழி.

வாழி மாதவர் வாழி மழைபுனி
வாழி மன்னவர் மற்றுள மூவேண்மார்
வாழி யன்னவர் மாகுலதேவதை
வாழி காங்கயன் மாதமிழ் வாழியே.

முற்றிற்று.

இந்நூலாசிரியர் பாடி அச்சிட்ட புஸ்தகங்கள்.

1. மயில்வாகனக் கடவுள் பதிகம்.
2. ஸ்ரீரங்கம் வழிநடைச் சிந்து.
3. கறைசைசிலேடை வெண்பா.
4. சிலேடை வெண்பாத்திரட்டு.
5. பூகம்பக் கீர்த்தனை.
6. புகழிமலைப் பதிகம்.
7. நல்லூர்ப் பதிகம்.
8. பில்லூர்ப் பதிகம்.
9. அங்காளம்மன் பதிகம்.
10. சென்னப்பை மாகாளிப் பதிகம்.
11. ஆனந்த விநாயகர் பதிகம்.
12. தியானமஞ்சரி.
13. ஞானரச மஞ்சரி.
14. பக்திரச மஞ்சரி.
15. நாசகவி மஞ்சரி.
16. துதிமஞ்சரி.
17. நாமக்கல் விநோதச் சிந்து.
18. [illegible] வழிநடைப் பதிகம்.
19. [illegible] கும்மி.
20. கரூர் [illegible] கும்மி.
21. [illegible] கும்மி.
22. மகாமக அலங்காரம்.
23. மதுக்கரைச் செல்லாண்டியம்மன் பதிகம்.
24. திருவானைக்கா மும்மணிக்கோவை.
25. மகாமாரிக் கும்மி.
26. தோத்திரக் கவிமாலை.
27. வெண்ணெய்மலை வண்ணம்.
28. கல்யாணப்பாட்டு.
29. சென்னிமலையாண்டவர் பதிகம்.
31. ஞானசித்தர் வண்ணப்பதிகம்.

48981
600 003.